

தங்கக்கட்டிகள் மூன்று

கிரேக்க மொழி கிராமிய கதை

ஆங்கிலத்தில் எழுத்தும் படமும்- அலிக்கி

தமிழில்- சபேசன் மருதப்பா



முன்னொருகாலத்தில் கிரேக்கத்தின் ஒரு கிராமத்தில் மிக ஏழையான யன்னிஸ் என்ற மனிதன் வாழ்ந்து வந்தான். அவன் காலை முதல் இரவுவரை கடினமாக உழைத்தும் அவன் மனைவிக்கும் குழந்தைகளுக்குமான உணவு வாங்குவதற்குக்கூட போதுமான பொருளை அவனால் சம்பாதிக்க முடியவில்லை .

தனது குடும்பத்தார்க்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கவேண்டுமென்றால் நல்ல வேலைகள் கிடைக்கும் வெளிநாட்டிற்கு சென்றால்தான் முடியும் என்று யன்னிஸ் ஒருநாள் முடிவுசெய்தான்.

தனது குடும்பத்தாரிடம் வேலைக்காக அவன் அவர்களை கண்டிப்பாக பிரிந்தே ஆகவேண்டியுள்ளதையும் போதுமான பணம் சம்பாதித்தபின் திரும்பிவிடுவதாகவும் அவன் அவர்களுக்கு வாக்களித்தான் .

மறுநாள் யன்னிஸ் தனது நீண்ட பயணத்தை தொடங்கினான் .

பரபரப்பான கான்ஸ்டான்டிநோபிள் நகரத்தை அடையும்வரை மூன்றுவாரங்கள் தொடர்ந்து நடந்தான்.

ஆனால் பலநாட்கள் வேலை தேடியும் அவனுக்கு வேலை எதுவும் கிடைக்கவில்லை.

அவனைப்போலவே வேலை தேடுபவர்கள் அங்கு பலர் இருந்தனர். கடைசியில் ஒரு வயதான பணக்காரருக்கு வேலைக்கு ஆளவேண்டும் என்று கேள்விப்பட்டான் .அவனைப்பார்க்க வேகமாக விரைந்தான் .





அந்த வயதான மனிதருக்கு யன்னிசை மிகவும் பிடித்துவிட்டது .உடனே அவனை வேலைக்கு அமர்த்திக்கொண்டான் .அவனுக்கு தங்க இடமும் ,உண்ண உணவும் கொடுக்கப்பட்டது .ஆனால் அவன் சம்பளத்தை அவன் முதலாளி பிடித்து வைத்துக்கொண்டான் மொத்தமாக அனைத்தையும் சேர்த்து ஒருநாள் யன்னிஸிடம் தருவதாக அவர் கூறினார். அவன் கிராமத்தில் கிடைத்த வேலையைவிட இது நன்றாக இருந்ததால் திருப்தியா இருந்தது .

பத்து வருடங்கள் கழிந்தன யன்னிசுக்கு அவன் குடும்பத்தை பிரிந்துஇருப்பது கடினமாகஇருந்ததால் ,அவர்களிடம் திரும்பிச்செல்ல அவன் முடிவெடுத்தான் .அந்த வயதான முதலாளியிடம் தன திட்டத்தை சொன்னான் ." யன்னிஸ் இதுநாள்வரை நல்ல வேலைக்காரனாக இருந்திருக்கிறாய் "என்று கூறி, இந்தா இதுவரை நீ சம்பாதித்த பணம் " என்று மூன்று தங்க கட்டிகளை கொடுத்து அவனுக்கு விடைகொடுத்தார்



யன்னிசுக்கு அவன் கண்ணால் பார்ப்பதை நம்ப முடியவில்லை பத்துஆண்டு உழைப்பிற்கு இவ்வளவு சிறிய தொகையா !.இருந்தாலும் அவனால் ஏதும்செய்ய இயலாததால் தங்கக்கட்டிகளை வாங்கிக்கொண்டு விடைபெற்றான் அவன் புறப்பட்ட நேரத்தில் அந்த வயதான மனிதர் அவனை கூப்பிட்டு கூறினார் "நீ எனக்கு ஒரு தங்க கட்டி கொடுத்தால் அதற்குப்பதிலாக மதிப்புமிக்க அறிவுரை ஒன்று நான் உனக்கு கூறுவேன் என்றார் ..

யன்னிஸ் மறுக்க நினைத்தாலும் மறுக்காமல் பணிவோடு ஒரு தங்கக்காசை திரும்ப கொடுத்தான் முதலாளி கூறினார் "நினைவில் வைத்துக்கொள் ,உனக்கு சம்பந்தம் இல்லாத ஒன்றைப்பற்றி நீ எப்போதும் கேட்காதே ,".என்றார் .

நல்லது முதலாளி என்றான் யன்னிஸ் .



மீண்டும் புறப்பட யத்தனித்தான் .அப்போது இரண்டாவது முறையாக அந்த வயதான மனிதன் அவனை மீண்டும் அழைத்தான் ",மேலும் ஒரு காசு கொடு உனக்கு மேலும் ஒரு அறிவுரை கூறுகிறேன்“ என்றான் யன்னிஸ் தயங்கினான் ஒரே ஒரு காசு மட்டும் வைத்துக்கொண்டு வீட்டிற்கு எப்படி செல்லுவது என்று வியந்தான் .மனம் ஒப்பாமலேயே மற்றோர் காசையும் முதலாளியிடம் கொடுத்தான். அவர் கூறினார், "நீ வந்த பாதையை விட்டு எப்போதும் விலகிச்செல்லாதே ."என்றார் .யன்னிஸ் அப்படியே என்று உறுதியளித்துவிட்டு மீண்டும் புறப்பட்டான் .

அப்போது மீண்டும் அவன் பேர் சொல்லி கூப்பிடுவதை கேட்டான் ."உன்னுடைய மூன்றாவது காசையும் கொடு நான் உனக்கு மேலும் ஒரு அறிவுரை வழங்குகிறேன் என்றான் .
மூன்றாவது முறையும் அந்த ஏழையால் இதை மறுக்க முடியவில்லை .

முதலாளி கூறினான் ,"நினைவில் வைத்துக்கொள் மாலையில் உனக்கு ஏதும் கோபம் வந்தால் காட்டாமல் காலை வரை அடக்கி வைத்துக்கொள் .“
" மிக்க நல்லது" முதலாளி என்று கூறிவிட்டு. இத்தனை வருடம் உழைத்தமைக்கு தாம் பெற்றது ஏதும் இல்லை என்று தொங்கியமுகத்துடன் வீட்டைவிட்டு புறப்பட்டான் .

சிறிதுகாலம் நடந்தபிறகு ,யன்னிஸ் ஒரு பெரிய மரத்தின்கீழ் வந்தான் .அந்த மரத்தின் உச்சியில் ஒருவன் அமர்ந்துகொண்டு அங்கு இருந்த மர இலைகளில் தங்க காசுகளை ஒட்டவைத்துக்கொண்டிருந்தான் .அது ஆச்சரியமாக இருந்தது என்றாலும் அவன் முதலாளி கொடுத்த அறிவுரைப்படி பாதை விலகாமல் அவன் வழியே தொடர்ந்தான் தொடர்ந்து நடக்காரம்பித்தபிறகு அந்த மனிதன் அவனை கூப்பிட்டான்.

"நான் நூத்தியேழு வருடங்களாக இந்த தங்ககாசுகளை இலையில் ஒட்டிக்கொண்டிருக்கிறேன் நடந்து போனவர்களில் ஏன் ஒட்டுகிறாய் என்று கேட்காத முதல் மனிதன் நீதான் "என்றான் .

" அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை" என்றான் யன்னிஸ் அதைக்கேட்ட அந்த மனிதன் மகிழ்ந்து," உன்னுடைய நல்ல குணத்திற்கு பரிசு வழங்க வேண்டும் என்றான். இந்த காசுகளை எடுத்துக்கொள் உதவியாகஇருக்கும்இதை அதிர்ஷ்டமாக நினைத்து மகிழ்ந்த யன்னிஸ் தன் சட்டைப்பைகள் நிறைய காசுகளை திணித்துக்கொண்டு எவ்வளவு தூக்க முடியுமோ அவ்வளவு காசுகளை கட்டியும் எடுத்துக்கொண்டான் .அந்த மனிதனுக்கு நன்றி சொல்லிவிட்டு கிளம்பினான் ,அவனது எசமான் நல்ல அறிவுரைதான் தந்திருக்கிறார் என்று எண்ணிக்கொண்டே புறப்பட்டான் .

சிலநாட்கள் கழித்து வழியில் மூன்றுமனிதர்கள் கோவேறு கழுதைகளை வரிசையாக
நடத்திச்சென்றுகொண்டிருப்பதை
கண்டான் .அவர்களும் ஒரே திசையிலேயே பயணித்ததால் ,அவர்களிடம் அவன் நானும் ஓய்வாக கழுதை முதுகில் உட்கார்ந்துகொண்டு வரவா என்று கேட்டான் .அதற்கு அவர்கள் ,"முன்னரே அதிகமான சுமையைத்தான் கழுதைகள் தூக்கிக்கொண்டிருக்கின்றன .இருந்தாலும் ஒரு மனிதன் மனிதன் உட்காருவதால் ஒன்றும் சிரமமில்லை " என்றார்கள் .எனவே யன்னிஸ் கழுதை முதுகில் உட்கார்ந்துகொண்டு பயணப்பட்டான் .

விரைவில் அவர்கள் ஒரு சத்திரத்தை அடைந்தனர் பசியான கழுதை ஓட்டிகள் நின்றுவிட தீர்மானித்தார்கள். அவர்கள் யன்னிசையும் கூட வருமாறு கூப்பிட்டனர். ஆனால் அவனுக்கு அவன் முதலாளி கொடுத்த இரண்டாவது அறிவுரை நினைவிற்கு வந்தது அதனால் புறப்பட்ட பாதையை விட்டு விலக விரும்பவில்லை . நான் இங்கேயே இருந்து கழுதைகளை கவனித்துக்கொள்கிறேன் என்றான் .அங்கேயே இருந்து காத்திருக்க தொடங்கினான் .

ஆனால் அந்த மனிதர்கள் எல்லாம் அந்த விடுதியின் கதவை திறந்து உள்ளே சென்ற அந்த கணமே பூமி பயங்கரமாக குலுங்கி அந்த விடுதி இடிந்து விழுந்துவிட்டது .அனைவரும் அதன் உள்ளேயே புதைக்கப்பட்டுவிட்டார்கள் .



அவன் முதலாளியின் அறிவுரைப்படி நடந்துகொண்டதற்காக அவருக்கு தனக்குள் நன்றிகூறிக்கொண்டான் .தனியே விடப்பட்ட கழுதைகளுடன் தன் பயணத்தை தொடர்ந்தான் . தனக்கு பரிச்சயமான தெருக்களையும் ,வீடுகளையும் பார்த்துக்கொண்டே பயணத்தை தொடர்ந்தான். கடைசியாக தனது வீட்டின் கதவுகளை தட்டியபோது மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தான் .

கதவு திறந்த கணம் அவன்
மனைவி அங்கே நின்றிருந்தாள்
.அவள் இவனை உடனே
அடையாளம் காணவில்லை
என்பதை அறிந்ததும் தன்னை
யார் என்று உடனே சொல்ல
வேண்டாம் என்று
முடிவெடுத்தான் ."இத்தனை
நேரம் கழித்து உங்களை
தொந்திரவு செய்வதற்கு
மன்னிக்கவும் .ஆனால் நானும்
எனது கோவேறுகழுதைகளும்
இன்று இரவு இங்கே
தாங்கிக்கொள்ள முடியுமா
".என்றான் . .

"நான் உங்களை வீட்டின்
உள்ளே அனுமதிக்கமுடியாது.
ஆனால் வீட்டின் பின்புறம்
உள்ள கொட்டகையில்
நீங்களும் உங்கள் கழுதைகளும்
தங்கி ஓய்வெடுக்கலாம் .“
என்றாள் அன்புடன் .தான் யார்
என்று தெரிந்தால் அவளுக்கு
ஏற்படவிருக்கும் வியப்பை
நினைத்துக்கொண்டு ,தனக்குள்
சிரித்துக்கொண்டே
கழுதைகளை தட்டினான் .



திடீரென்று ஒரு மனிதன் அந்த
வீட்டிற்குள் நுழைவதை கண்டு
அவன் மகிழ்ச்சி கோபமாக மாறியது
..ஓஹோ ,தனக்காக
காத்திருந்துபார்த்து சோர்ந்துபோய்
வேறு ஒரு கணவனை
தேடிக்கொண்டாள் போலும் என்று
நினைத்துக்கொண்டான் தனது
துப்பாக்கியை கையில்
எடுத்துக்கொண்டு கதவை நோக்கி
நடக்கத்துவங்கினான் .அப்போது
முதலாளி சொன்ன மூன்றாவது
அறிவுரை நினைவிற்கு வந்தது .
எனவே காலை வரை காத்திருக்க
முடிவு செய்தான் .

இரவு முழுவதும் யானிஸ்
விழித்திருந்தான் .விடிந்ததும் கோழி
கூவுவதற்குமுன் எழுந்திருந்தான்
.தனது கழுதைகளுக்கு உணவு
கொடுக்க வெளியே சென்றான்
.வீட்டிலிருந்து வந்த சத்தம்
அவனுடைய மனைவியும்
எழுந்துவிட்டதை தெரிவித்தது .

திடீரென்று கதவு திறக்கிறது .நேற்று இரவு பார்த்த அந்த மனிதன் நின்றுகொண்டிருந்தான் ."நான் போய்வருகிறேன் அம்மா .மதியம் சாப்பாட்டிற்கு கொஞ்சம் அவரை விதை அனுப்பிவைக்கிறேன் ."என்றான் .யானிஸ் நிம்மதி பெருமூச்சு விட்டான் .அது அவனுடைய சொந்த மகன் . வளர்ந்து பெரிய மனிதனாகிவிட்டான் .அவனைத்தான் கிட்டத்தட்ட காயப்படுத்த இருந்தான் .ஓடிச்சென்று அவனை கட்டிக்கொண்டான் .தான் யார் என்பதை கூறினான் .

பின் இருவரும் வீட்டிற்குள் சென்றனர் அந்த மகிழ்ச்சியான குடும்பம் மீண்டும் சேர்ந்தது .பின் அவன் தன் கதை முழுவதையும் கூறி கழுதையிலிருந்து தங்க மூட்டைகளை கீழே இறக்கிஅவற்றை அவிழ்த்தான் .அங்கு அவர்கள் வாழ்நாள் முழுவதும் நிறைவோடு வாழ்வதற்கானவற்றை கண்டார்கள் .

அலிக்கி கிட்டத்தட்ட முப்பது குழந்தை புத்தகங்களுக்கு சுருக்கம் எழுதியிருக்கிறார் . அவற்றில் ஒன்பது புத்தகங்களுக்கு கதையும் எழுதியிருக்கிறார் .

அவற்றில் சில Story of William Penn, George and the cherry tree, And story of Johnny apple seed . அவர் மண்வினை பொருட்கள் செய்வதற்கும் ,ஓவியம் வரைவதற்கம் கற்றுக்கொடுத்தார் .சுவரோவியங்கள் வரைந்தார் .

மண்பொம்மை செய்வதில் வேலை செய்தார் .மேலும் வெள்ளி ,எனாமல் ,பேப்பர் வேலை ,மொசைக் தரைகள் ,கல்லூரி இவற்றில் வேலை செய்தார் .அவருடைய கலைப்பொருட்கள் கிராபிக்கில் மீண்டும் செய்யப்பட்டன .அளிக்கி பொம்மைகள் செய்வதில் பெருவிருப்பம் உள்ளவர் .அவரும் அவர் கணவர் FRANZ BRONDENBERG ம் நியூயார்கில் அவர்களுடைய இரண்டு குழந்தைகள் JASAM மற்றும் ALEXA வுடன் வசிக்கிறார்கள் .